# குருவம்சம் ஆத்மாலயம்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும். - குறள்- 50.**

நம்மோடு வாழ்ந்து இயற்கை எய்திவர்களுக்கு ஆத்மாலயம் அமைத்து குருவாக - தெய்வமாக வழிபட அமைக்கும், ஆத்மாலயம் அமைப்புகள் - ஆத்மா வழிபாட்டில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்.

ஆத்மாலயம் அமைப்பதற்கு யாரிடமும் எந்த வகையிலும் நன்கொடைகள் மற்றும் தானங்கள் வாங்க கூடாது. உங்கள் விருப்பமான ஆத்மாக்களுக்கு உங்கள் சொந்தமான பணத்தைக் கொண்டே அமைக்க வேண்டும்.

இயற்கை எய்தியவர்கள் பெயரில் சொத்துக்கள் பணம் இருந்து அதை எடுத்து ஆலயம் அமைக்க உரிமைகள் இருந்தால், அதனைக் கொண்டு அவர்களுக்கு ஆத்மாலயம் அமைக்கலாம்.

ஆத்மாலயத்தில் தியானமண்டபம் - விசாலமான சுற்றுச்சுவர் - அன்னதான கூடம் - தேவைக்கு ஏற்ப நிர்வாக அறை மற்ற வசதிகளையும் உள்ளடங்கியதாக அமையுங்கள்.

## தியானமண்டபம்:

உங்கள் மனம் இயற்கை எய்தியவர்கள் மேல் அன்பும் பாசமும் மரியாதையும் எவ்வளவு வைத்துள்ளீர்களோ அந்த அளவுக்கு விஸ்தாரமாக வசதி - வாய்புக்கு ஏற்றார் போல் தியானமண்டபம் கட்டுங்கள். மண்டபத்தின் உள்ளே உங்கள் நேசமானவர்கள் பெயரிலேயே பிரதான சன்னிதானம் அமையுங்கள். ஆலயமுகப்பில் குரு .......................................... (இயற்கை எய்தியவர்கள் பெயர் ) பிரதான சன்னிதானம் என்று எழுதுங்கள். சன்னிதானத்தில் அவர்களுக்கு ஜோதி ஒன்று ஏற்றுங்கள். உருவ வழிபாடு வேண்டாம். ஜோதிக்கு வலது-இடது பக்கங்களில் இரண்டு பீடங்கள் அமைத்து. அதில் தீபங்கள் ஏற்றுங்கள். ஆண்கள் - பெண்கள் இரு பகுதியாக அமர்ந்து அவர்கள் இல்லத்து ஆத்மாக்களை நினைத்து தியானம் செய்து ஆத்மாக்களை வழிபட வாய்ப்பு அளியுங்கள். தியானமண்டபத்திற்கு வெளியே- ஆலயத்தின் உள்ளே பிரதான தெய்வத்தின் வரலாறு - ஆலயத்தை அமைத்த நிர்வாகியின் பெயர் மற்றும் ஆலயம் வரலாறு ஒன்று காலத்தால் அழியாத கல்வெட்டில் வடித்து வையுங்கள். பிற்கால தலைமுறைகளுக்கு ஆலய வரலாறு மாறாமல் கிடைக்கும். கல்வெட்டில் பிரதான தெய்வத்தின் வரலாறும் ஆலயம் அமைத்தவர்கள் பெயர்கள் மட்டுமே பதிக்கப்பட்டிருக்கவேண்டும்.

எந்த காலத்திலும் மற்றவர்கள் பெயர் வரலாறு பதிக்க கூடாது. ஒரு தெய்வத்திற்கு ஒரு ஆலயம்தான். வேறு எங்கும் ஒரே தெய்வதிற்கு மற்றொரு ஆலயம் அமைக்க கூடாது. ஒரே ஆலயத்தின் உள்ளே இரண்டாவது பிரதான சன்னிதியும் வைக்க கூடாது.கணவன் மனைவி என்றால் கூட கிடையாது.

பிரதான தெய்வம் தவிர மற்றவர்களுக்கு நினைவு சின்னமாக பெயர் பதித்த கல்வெட்டு அமைத்து வழிபட ஆலயத்தின் நிர்வாகம் மற்றவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட வேண்டும்.

நீங்கள் அமைக்கும் இந்த ஆலயத்தை யாருக்கும் தானம் கொடுக்கவோ எழுதி வைக்கவோ தேவையில்லை.உங்களுக்கு பின் நீங்கள் விரும்பும் உங்கள் வாரிசுக்கே முழு சொந்தமாகும். இதில் மற்றவர்களுக்கு உரிமை கிடையாது. ஆனால் மற்றவர்களும் வந்து பொதுவான ஆலயமாக ஆத்மாக்களை வழிபட வாய்ப்பளிக்கவேண்டும்.

ஆலயத்தில் மற்றவர்களையும் இணைப்பதனால் ஆலயம் காலம் காலமாக நிலையாக நிற்கும்.

## மற்றவர்கள் இல்லத்து ஆத்மாக்களுக்கு நினைவு சின்னம்:

தியானமண்டபத்தை சுற்றி விசாலமான சுற்றுச்சுவர் எழுப்புங்கள். பஸ் நிறுத்தங்களில் அமைக்கப்பட்ட நிழற்குடை போல் சுற்றுசுவர் நீளவாக்கில் நிழற்குடை அமையுங்கள். வசதி உள்ளோர் சிமெண்டால் ஆன தளங்கள் அமைத்து கொள்ளுங்கள்.

நிழற்குடையின் கீழே மற்றவர்கள் இல்லத்து ஆத்மாக்களுக்கு நினைவு சின்னங்கள் அமையுங்கள்.

அதில் நண்பர்கள்- உறவினர்கள் - பொது ஜனம் - ஜாதி - மதம் தேசம் நாடு பாராமல் யாராக இருந்தாலும் அவர்கள் இல்லத்து ஆத்மாக்களுக்கு நினைவு சின்னம் அமைக்க அனுமதிக்க வேண்டும். இதில் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் பாகுபாடுகள் கூடாது. யாருக்கும் முன்னுரிமையும் கிடையாது. இது பொதுவான கோவில் என்பது நிர்வாகிகள் மனதில் எப்போதும் இருக்க வேண்டும். அதுவே தூயஆத்மாக்களும் விரும்புவார்கள்.

## நினைவு சின்னம் அளவும் அமைப்பும்:

நினைவு சின்னம் என்பது ஆலயம் அமைக்க வாய்ப்பும் சந்தர்பமும் அமையாதவர்கள், மற்றவர்கள் அமைக்கும் ஆத்மாலயங்களில் தான் விரும்பும் ஆத்மாவின் பெயரை கல்வெட்டு ஒன்றில் பதித்து வழிபடுவதே நினைவு சின்னம் ஆகும்.. இயற்கை எய்தியவர்களின் சகோதர்கள் - சகோதிரிகள் - தாய் - தந்தை - கணவன் - மனைவி - பிள்ளைகள் - மற்றும் இரத்த பந்தங்கள் ஆத்மாகளுக்கு நினைவு சின்னங்கள் வைத்து குருவாக - தெய்வமாக வழிபடலாம். அவர்கள் நினைவாக இந்த ஆலயத்தில் பிரசாதமாக அன்னதானங்கள் வழங்கலாம். இரத்த பந்தம் இல்லாதவர்களுக்கு நினைவு சின்னங்கள் வைக்க அனுமதி கிடையாது.

பிரதான தெய்வத்தின் இடது பக்க சுவரில் ஆண் ஆத்மாக்களின் ( தந்தை - கணவன்- சகோதரர்கள் - ஆண் பிள்ளைகள் - மற்ற ஆண் உறவினர்கள் ) பெயர்களும், வலது பக்க சுவரில் பெண் ஆத்மாக்களின் ( தாய் - மனைவி - சகோதிரிகள் - பெண் பிள்ளைகள் - மற்ற பெண் உறவினர்கள் ) பெயர்கள் பதிக்கப்பட வேண்டும்.

ஆலய சுற்று சுவரில் **20 செ.மீ** அகலமும் **40 செ.மீ** நீளமும் கொண்ட கல்வெட்டில் ஆத்மாவின் பெயர் எழுதி சுற்றுசுவரில் பதிக்க வேண்டும். பாகுபாடின்றி ஆலயத்தில் வைக்கப்படும் எல்லா கல்வெட்டும் ஒரே அளவாகவே இருக்க வேண்டும்.

கல்வெட்டை வணங்குவதற்கு வசதியாக தரையிலிருந்து **20** செ.மீ க்கு மேலும் **190** செ.மீ மேல் உயரமும் போகாமல், சுற்றிலும் இடைவெளி விட்டு கீழிருந்து மேலாகவும் பக்கவாட்டிலும் ஒரே நேர் கோடுகளில் அமைக்க வேண்டும். பெயருக்கு முன் சிறிது உதிரிப் பூக்கள் வைக்க வசதியாக அமையுங்கள்.

நினைவு சின்னத்தில் ஆத்மாக்களின் பெயருக்கு முன் குரு என்று எழுதுங்கள்.உதாரணமாக நல்லசிவம் ,மணிகண்டன் ,டேவிட் ,மாலதி , நாச்சம்மாள் என்று இருந்தால் குரு நல்லசிவம் ,குரு மணிகண்டன் ,குரு டேவிட் ,குரு மாலதி ,குரு நாச்சம்மாள் என்று குரு சேர்த்து எழுதுங்கள். அவர்கள் வாங்கிய பட்டம் பதவிகள் பெயருக்கு முன்னும் பின்னும் போடவேண்டாம். தாய் தந்தையின் முதல் எழுத்தும் பதிக்க வேண்டாம்.ஜாதி மதம் பெயர்கள் போட வேண்டாம் மதக் குறியிடுகள் வேண்டாம். இவைகள் எல்லாம் அவர்கள் புவியில் இருக்கும் போதுதான் பயனபடுத்தபட்டது. அவர்கள் புண்ணியம் மட்டுமே தூய ஆத்மாவாக்கும்.

மேலும் அவ்வாறு பதிக்க படும்போது நம் வழிபாட்டில் பிரிவுகள் ஏற்படுத்தும்.இதனால் அனைவருக்கும் பொதுவான ஆலயம் என்ற தன்மை மாறும். ஆகவே பெயருடன் குரு மட்டுமே சேர்த்து எழுதினால் அவர்கள்தான் நமக்கு குருவாக தெய்வமாக விளங்குவதாக பொருள் படும். நமக்குள் ஜாதி மதம் இன்றி சமத்துவம் ஏற்படும்.

**நினைவு சின்னதிற்கான கட்டணம்:**

ஆத்மா வழிபாட்டில் நம்பிக்கை உள்ளவர்களும்,நம்மோடு வாழ்ந்து இன்று இறைவுலகில் இருக்கும் முன்னோர்கள் நாம் வணங்கும்போது தொடர்ந்து நம்மை வழி நடத்துவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளவர்களும் இந்த ஆலயம் வந்து அவர்கள் விரும்பும் குருக்களுக்கு நினைவு சின்னம் அமைத்து வழிபடலாம். ஆலய நிர்வாகமே கல்வெட்டுகள் அமைக்க வேண்டும். அப்போதுதான் கல்வெட்டுக்கள் ஒரே மாதிரியாக அமையும்.தனித்தனியாக கல்வெட்டுகள் கொண்டுவர அனுமதித்தால் அவரவர்கள் விருபத்திற்கு கல்வெட்டுகள் கொண்டு வந்து ஒழுங்கான அழகு இல்லாமல் போய் விடும். இதில் ஆலய நிர்வாகிகள் கண்டிப்புடன் இருக்கவேண்டும் யாருக்கும் சலுகைகள் காட்டகூடாது.

கல்வெட்டுகள் அமைக்க விரும்புவர்கள் பதிவு கட்டணமாக ஒரு கல்வெட்டுக்கு ரூபாய் ஒரு ஆயிரம் ( 1000 ) செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும். இக்கட்டனத்தை நிர்வாகிகள் விருப்பம்போல் அமைத்துக்கொள்ளலாம். இது முதல் ஒரு ஆண்டிற்கான கட்டணம் ஆகும்.

கல்வெட்டில் குருவின் பெயருக்கு கீழே ஆலயத்தில் பதிவு செய்த பதிவு எண்கள் சிறிதாக எழுத வேண்டும்.

ஆலய நிர்வாகம் பதிவேடு புத்தகத்தில் பதிவு எண் கொடுத்து குருவின் பெயர், குருவின் புகைபடம் குருவின் தாய், தந்தை, மனைவி/ கணவன்,மற்ற உறவுகள் பெயர்கள், முகவரிகள் தகவல் தொடர்புக்கு தொலைபேசி எண்கள், இ- மெயில் இருப்பின் விபரங்கள் பதிவுகள் செய்து கொள்ளவேண்டும். இப்பதிவை பதிவு செய்தவர்கள் விருப்பத்தின்படி வெளிப்படியாகவும் / ரகசியமாகவும் வைத்துக்கொள்ளலாம் .இதனை குலதெய்வம் கோவிலாக ஏற்றுக்கொள்ளலாம். குடும்ப விபரங்கள் அனைத்தும் இருப்பதால், குடும்ப உறவுகள் காலப்போக்கில் பிரிந்து போயிருந்தாலும் தொடர்ந்து குருவை வழிபட்டுவந்தால் ஆலய பதிவேட்டில் கல்வெட்டின் பதிவுகள் எண்கள் கொண்டு பார்த்து உறவுகளுடன் தொடர்புகள் வைக்க குலதெய்வம் கோவிலாக விளங்கும். ஆலயம் அமைத்தவர்கள் வசதியானவர்களாக இருந்தாலும் கல்வெட்டுக்கள் பராமரிப்பு செலவுகள் வாங்குவது அனைவரையும் ஆலயத்திற்கு அழைப்பது போல் ஆகும்.

ஒவ்வொரு வருடமும் பராமரிப்பு செலவாக ரூபாய் 500 மட்டும் ஆலய நிர்வாகம் வசூலித்து அதில் பாதி ரூபாய் 250 மட்டும் ஆலய நிர்வாகத்திற்கு, மின்சாரம், துப்பரவு, பாதுகாப்பு போன்ற பணிகளுக்கு ஆகும் செலவாக சேர்த்து கொள்ளலாம். மீதம் ரூபாய் 250 பணம் குருக்கள் நினைவு நாள் அன்று அன்னதானம் வழங்கவேண்டும். காலத்திற்கு ஏற்ப மிக குறைந்த தொகையை இதில் உயர்த்திக்கொள்ளலாம். கல்வெட்டுகள் அமைத்தவர்கள் அமைத்ததோடு நில்லாமல் ஆண்டு தோறும் நிர்வாக பணம் செலுத்தி தொடர்ந்து வணங்கி வர வேண்டும்.

கல்வெட்டுகள் பதிவு கட்டணம் மற்றும் வருடத்திற்கான நிர்வாகக் கட்டணம் தவிர வேறு எந்த பணமும் கல்வெட்டுகள் பதித்தவர்களிடம் வசூல் செய்ய கூடாது.

சிலர் அமைத்த கல்வெட்டுக்கள் அவர்கள் காலத்திற்கு பின் வாரிசுகள் பராமரிக்க விருப்பம் இல்லாமல் போகலாம். பராமரிப்பு இல்லாத கல்வெட்டுக்களை நிர்வாகம் அப்புறப்படுத்தலாம். சில மலையில், குகையில் சுற்றுலாவாசிகள் தான் விரும்பும் பெயர்கள் எழுதி வைப்பார்கள்.அது போல் இந்த நினைவு சின்னங்களும் மாறிவிடக் கூடாது. சிலர் ஆர்வத்தில் ஆரம்பத்தில் கல்வெட்டுகள் அமைப்பார்கள் பின்பு மறந்து போவார்கள்.அல்லது ஆத்மா வழிபாடு விரும்பாமல் போய் விடுவார்கள். ஆகையால் பதிவு கட்டணம் இல்லாமல் பதிவுகள் செய்தால் கோவிலுக்கு வருபவர்கள் எல்லாம் ஆளாளுக்கு வாய்க்கு வந்த பெயரையெல்லாம் சொல்லி வேடிக்கையாக பதிவுகள் செய்துவிடுவார்கள். ஆகையால் ஒவ்வொரு கல்வெட்டிலும் ஒரு பெயர்தான் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கல்வெட்டிற்கும் தனித்தனியான பதிவு கட்டணமும், தனிதனியான ஒவ்வொரு வருடத்திற்கான நிர்வாகம் கட்டணமும் பெறவேண்டும். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நிர்வாக

செலவுகள் ஆலயத்திற்கு கட்டாமல் போனால் கல்வெட்டை நிர்வாகம் தேவைக்கு ஏற்ப நேரத்தில் அப்புறப்படுத்திவிடலாம். கல்வெட்டுகள் நிர்வாகம் அமைத்ததால் உரியவரிடம் திருப்பித்தர தேவையில்லை. ஒரு முறை அப்புறபடுத்த பட்ட கல்வெட்டை மீண்டும் ஆலயத்தில் வைக்க விரும்பினால் புதிதாக பதிவு கட்டணம் மீண்டும் செலுத்த வேண்டும். ஆண்டுதோறும் தொடர்ந்து நிர்வாக பணம் செலுத்தி வணங்கி வரும் கல்வெட்டுக்களை நிர்வாகம் எந்த காரணம் கொண்டும் அப்புறபடுத்தக் கூடாது அது பாவ செயல்கள் ஆகும்.

சந்தர்ப்ப வசத்தால் வழிபடாமல் இடையில் விட்டுப் போயிருத்தல் நிர்வாகம் மனிதாபத்தன்மையில் தொடர்ந்து வழிபட அனுமதிக்கலாம்.

பல வருடங்கள் வெளி இடங்களில் வசிப்பவர்கள் வருடம் தவறாமல் நிர்வாகத்திற்கு பணம் அனுப்பி கல்வெட்டை பாதுகாத்து வணங்கி வரலாம்.

வேறு ஆத்மாலயங்களில் இதே குருவின் கல்வெட்டை பதிக்க விரும்பினால், இங்கு வழிபாட்டை நிறுத்த விரும்பினால் நிர்வாகத்திற்கு தெரிவித்தால் போதுமானது. ஒவ்வொரு ஆண்டு செலுத்தும் பணம் அந்த ஒரு ஆண்டு மட்டும் நிர்வாக கட்டணம் ஆகும். பல ஆண்டுக்கான முழு பணத்தை ஒரே தடவையில் நிர்வாகம் ஏற்றுக் கொள்ள கூடாது. அது முன்னோர்களை முதியோர் காப்பகத்தில் சேர்த்தது போல் ஆகும். ஆண்டு முழுவதும் வணங்கி அன்னதானங்கள் வழங்கி வழிபட்டால் தான் குருக்கள் வழிபாடாகும்.

## நினைவு சின்னம் கல்வெட்டுகள் வழிபாடு:

குருக்களின் கல்வெட்டுக்களை ஆலயம் வந்து வணங்க வாய்ப்பு இருந்தால் காலையும் - மாலையும் வணங்கலாம்.

மாலையில் மட்டும் வாய்ப்பு உள்ளவர்கள் மாலையில் வந்து வணங்கி செல்லலாம்.ஓய்வு நாட்களில் வணங்குபவர்கள் குடும்பத்தோடு வந்து வணங்குங்கள்.குடும்பத்தின் நல்ல நாட்களில் வந்து வணங்குங்கள்.

**முக்கியமாக பௌர்ணமி நாட்களில் மாலையில் தவறாது வந்து வணங்குங்கள்.**

சித்திரா பௌர்ணமியை "**குரு சித்திரா பௌர்ணமி**" என்று அழைக்க வேண்டும். அன்றைய நாளில் குருக்களை ஆத்மாலயம் வந்து குடும்பத்தோடு குருக்களை வணங்குவது பிரசாதம் வழங்குவதுதால் மன நிம்மதி- அமைதி- சாந்தி குருக்களின் ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

ஆத்மா வழிபாடு விருப்பமுடையவர்கள் யார் வேண்டுமானாலும் ஆத்மாலயம் வந்து தியானம் செய்து அவரவர்கள் இல்லத்து ஆத்மாக்கள் நினைத்து வணங்கி செல்ல எந்த நிபந்தனைகளும் கிடையாது.

கல்வெட்டுகள் வைப்பதும் அவரவர்கள் விருப்பமாகும்.இது ஆத்ம வழிபாட்டிற்கான பொது ஆலயம் ஆகும். குருக்களை வணங்கும் நாட்களில், ஆலயம் வரும் நாட்களில், ஆலயத்தில் , பிரசாதத்தில் மாமிசம் - மாமிச உணவுகள் கண்டிப்பாக தவிர்த்திடுங்கள். உங்கள் குருக்கள் வாழும் போது மாமிசம் விரும்பியிருந்தாலும் குருவாக வழிபடும் போது மாமிசம் தவிர்த்திடுங்கள்.

ஆத்மாலயம் வணங்க வரும்போது சிறிது வாசனை உதிரிப் பூக்களை கொண்டுவந்து நினைவு சின்னத்தில் சமர்ப்பித்து விட்டு வணங்கி, பிரதான சன்னதி ஜோதிகளில் பூக்கள் சமர்ப்பித்து, தியான மண்டபத்தில் அமர்ந்து தியானம் செய்து உங்கள் கோரிக்கைகளை குருக்களிடம் சமர்ப்பியுங்கள் மனதில் நிம்மதி, அமைதி,சாந்தி உண்டாகும்.

- ஆத்மாலயத்தில் எந்த மத வழிபாட்டையும் பின்பற்ற கூடாது. ஆலயத்தில் நுழைந்ததில் இருந்து கண்டிப்பாக அமைதி காக்க வேண்டும்.
- மற்றவர்கள் தியானத்திற்கு இடையூறுகள் ஏற்படுத்தல் கூடாது.நாம் குருக்களிடம் வழிபாடு செய்ய மட்டுமே ஆலயம் வந்தோம் என்பதை மறந்து மற்றவர்களோடு ஆலயத்தின் உள்ளே பேசக்கூடாது.
- நிர்வாக அறையில்கூட மெதுவாக பேச வேண்டும்.
- ஆலயம் வந்த உறவினர், நண்பர்கள், மற்றவர்களுடன் ஆலயத்தின் வெளியே பேசுங்கள்.
- ஆலயத்தின் உள்ளே முழு அமைதி காத்திடுங்கள்.
- மதபாடல்கள் பாடுதல், பஜனைகள் செய்தல், தேங்காய் உடைத்தல், தரையில் விழுந்து வணங்குதல்,மாலைகள் சமர்ப்பித்தல்,நேர்த்திகடன் என்று எதுவும் கிடையாது.
- தியானம் ஒன்றே குருக்கள் வழிபாடாகும்.
- ஆலயத்தில் திருவிழாக்கள் கிடையாது.

---

காலை 6 AM முதல் மாலை 6 PM வரை தொடர்ந்து திறந்திருக்கும்.

பௌர்ணமி நாட்களில் 7 PM வரை திறந்திருக்கும்.

சித்திராப் பௌர்ணமி அன்று 8 PM வரை திறந்திருக்கும்.

### பிரசாதம் (அன்னதானம்) :

மற்ற கோவில்களில் பிரசாதம் தருவார்கள் நாம் வாங்கி சாப்பிடுவோம். ஆனால் இந்த ஆலயத்தில் இருப்பது நம் குருக்கள், நம் தெய்வங்கள் என்ற காரணத்தால் நாம் விரும்பும் நாட்களில் இங்கு நாம் பசித்தவர்களுக்கு பிரசாதம் வழங்குகின்றோம்.

கோவிலுக்கு வந்து பிரசாதம் உள்ளிருந்து நாம் ருசித்து விட்டு போகாமல் நம் குருக்களின் நினைவாக வெளியே இருக்கும் பசித்தவர்களுக்கு குருக்களின் பிரசாதமாக வழங்கி மகிழ்வதே குருக்களுக்கு மகிழ்ச்சி தரும். ஆத்மாலயத்தில் உள்ளே பிரசாதங்கள் வழங்குவதையும், சாப்பிடுவதையும் தவிர்த்திடுங்கள். வெளியே இருக்கும் பசித்தவர்களுக்கு குருக்களின் நினைவாக பிரசாதம் வழங்கி புண்ணியம் பெறுங்கள். இந்த புண்ணியம்தான் குருக்களையும் உயர்த்தும் உங்களையும் உயர்த்தும். பிரசாதம் சிறுசிறு உணவு பொட்டலங்களாக சாம்பார் சாதம், லெமன் சாதம், புளியோதரை ,சப்பாத்தி என்று இருந்தால் விநியோகிக்க வசதியாக இருக்கும்.

ஆலயத்தின் ஒரு ஓரத்தில் ஆலய நிர்வாக அறை மற்றும் உணவு வழங்கும் சன்னல் ஒன்று அமைத்து அதன் வழியாக குரு நினைவாக பிரசாதம் வழங்குபவர்களை கொண்டே வெளியே உள்ளவர்களுக்கு பிரசாதம் வழங்குங்கள். பத்து பொட்டலம் இருபது பொட்டலம் என்று உங்கள் வசதிக்கு ஏற்ப வழங்கங்கள். பிரசாதம் வழங்க விரும்புவர்கள் ஆலய நிவாகத்துடன் தொடர்பு கொண்டு எந்த தேதியில் எத்தனை பொட்டலம் வேண்டுமென்று பணம் செலுத்த வேண்டும். நிர்வாகிகள் வழக்கமாக உணவகம் ஒன்றுடன் தொடர்புகள் வைத்துக் கொண்டு தொலைபேசியில் தெரிவித்தால் போதும். இதனால் ஒரே வகையான உணவு ஒரே அளவில் விநியோகிக்கலாம்.பிரசாதமாக வரும் பொட்டலத்தின் மேல் ஆலயத்தின் பெயர், குருவின் பெயர் குறிப்பிட்டு வழங்குபவர்களிடம் கொடுத்துவிட்டால் நேரடியாக அவர்களே வழங்கும் போது மகிழ்ச்சியடைவார்கள். குருக்கள் பிரசாதம் பசியை போக்குகின்றது நோய்க்கு மருந்தாகின்றது. வரமுடியாத தூரத்தில் பசியோடு இருப்பவர்களுக்கும், நோயாளிகளுக்கும் கொண்டும் கொடுக்கலாம்.

நீங்கள் எந்த மதத்தை விரும்புவராக இருந்தாலும் உங்கள் நண்பர்கள் எந்த மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் ஒன்றாக இணைந்து நம்மோடு வாழ்ந்தவர்களுக்கு நன்றியும்-மரியாதையும், அன்பும் செலுத்தும் ஒரே ஆலயம் குருவம்சம் ஆத்மாலயம் தான். அரசு நிலப்பதிவு அலுவலகம் சென்று இறந்தவர்கள் பெயரில் சொத்துக்கள் எழுத முடியாது. வாழ்ந்த காலத்திற்கு பின் யாராலும் புண்ணியம் செய்ய முடியாது. குருவம்சத்தில் ஆத்மாலயம்

அமைப்பதால் ஆத்மா சொத்துக்களை அடைகிறார்கள். நினைவு சின்னங்கள் அமைப்பதால் அவர்கள் பூமியில் வந்து அமர்ந்து ஆசி தர இடம் பதிவு செய்யப் படுகின்றது.

அவர்கள் பெயரில் பிரசாதம் வழங்கும்போது புண்ணியம் கூடுகின்றது. இதனை காணும் அன்பர்கள் செல்வந்தர்களாக இருந்தால் உங்களுடன் வாழ்ந்து இயற்கை எய்தியவர்கள் மேல் அளவுக்கு அதிகமாக அன்பும் பாசமும் இருந்தால் அவர்கள் பெயரில் உங்கள் மனம் விரும்பும் அளவு குருவம்சம் ஆத்மாலயம் அமைத்து மனதில் நிம்மதி, அமைதி, சாந்தி அடையுங்கள்.

வசதி குறைவானவர்களாக இருந்தாலும் உடன் வாழ்தவர்களுக்கு உங்கள் மனதில் குருவம்சம் ஆத்மாலயம் அமைக்க விருப்பம் இருந்தால். உறவினர்களையும் நண்பர்களையும் இணைத்து நீங்கள் விரும்பும் இயற்கை எய்தியவர்கள் பெயரில் சிறிய அளவு குருவம்சம் ஆத்மாலயம் அமைத்து மனதில் நிம்மதி, அமைதி, சாந்தி, அடையுங்கள்.

குருவம்சம் ஆத்மாலயம் வணங்குவதால் அனைத்து குருக்களின் ஆசீர்வாதமும் மற்றும் நம் இல்லத்து ஆத்மாக்களுக்கு அமைத்த கல்வெட்டு சின்னத்தை தொடர்ந்து வணங்கி வரும் போதும் நம் குருக்களின் (இயற்கை எய்தியவர்கள்) பூரண ஆசீர்வாதம் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி, அமைதி, சாந்தி, நோயற்ற நீண்ட ஆயுள் தொடர்ந்து அமையும்.

நம்மோடு வாழ்ந்தவர்களுக்கு ஆத்மாலயம் அமைத்து வழிபட எந்த மதத்திலும் பொதுவான முறை இல்லாத போது, குருவம்சம் ஆத்மாலயம் அமைத்து வழிபடுவதே உண்மை வழிபாடு என்று அன்புடன் குருவம்சம் கூறுகின்றது. நம்மோடு வாழ்ந்தவர்களுக்கு ஆத்மாலயம் அமைக்கும் போது நாம் எந்த மத வழிபாட்டையும் பின்பற்ற தேவையில்லை.

---

## தனக்கு தானே ஆத்மாலயம் அமைத்தல்

செல்வம் மிகுதியாக இருந்து வாரிசுகள் இல்லாத தம்பதிகள் மற்றும் செல்வம் உள்ள தனிநபர்கள் அவர்கள் வாழும் காலத்தில் தான-தருமங்கள் தாங்களே செய்யவும், அவர்கள் காலத்திற்கு பின்பும் அவர்கள் விட்டு செல்லும் செல்வங்கள் தொடர்ந்து நல்வழியில் தான-தருமங்களுக்காக சென்றடையவும் அமைப்பதே தனக்கு தானே ஆத்மாலயம் அமைத்தல் ஆகும்.

இவர்கள் குருவம்சம் ஆத்மாலயம் ஒன்று அமைத்து. அதற்கு அறக்கட்டளை அமைத்து, அதை தாங்களே நிர்வாகித்துக் கொண்டு, அன்னதானம் ( பிரசாதம்) மற்றைய தருமங்களையும் செய்து வரலாம்.

குருவம்சம் ஆத்மாலயம் நெறிமுறையுடன் அமைத்துக்கொள்ள வேண்டும். கணவன்/மனைவி தம்பதிகள் அமைத்த ஆத்மாலயமாக இருந்தால் குருவம்சம் ஆத்மாலயம் என்ற பெயர் மட்டும் இருந்தால் போதும். குரு......................பிரதான சன்னதி என்ற இடத்தில் குருவின் பெயர் எழுத தற்போது தேவையில்லை. தம்பதிகளில் யாராவது முதலில் இறப்பவர்களின் பெயரை குரு...( இறந்தவரின் பெயர் )....பிரதான சன்னதி என்று எழுதி தொடர்ந்து உயிருடன் இருப்பவர் ஆத்மாலயத்தை நடத்தலாம்.

அவர்களின் இறுதி காலத்தில் நம்பிக்கையான நபரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்து தன் காலத்திற்கு பின்பும் தன் செல்வங்கள் நல்வழியில் பயனடையச் செய்யலாம்.

தம்பதிகள் இருவர் சேர்ந்து ஆத்மாலயம் அமைத்தாலும் முதலில் இறப்பவர் பெயரே பிரதான சன்னதியாக இருக்க வேண்டும்.இரண்டாவது இறப்பவர் பெயர் நினைவுச்சின்னம் கல்வெட்டில் பதிக்க வேண்டும்.

தனி நபர் அமைத்த ஆத்மாலயம் முதலில் குருவம்சம் ஆத்மாலயம் என்று பெயர் இருந்தால் போதும்.அவர் காலத்திற்கு பின் அவர் பெயரை குரு.....( ஆத்மாலயம் அமைத்தவர்

பெயர்)....பிரதான சன்னதி என்று எழுதி அவரால் ஒப்படைக்க பட்டவரால் அறக்கட்டளை தொடர்ந்து பிரசாதம் (அன்னதானம்) அளித்தால் மற்ற நல்வழியில் ஆத்மாலயம் நடத்தி செல்லலாம்.

இதுவே தனக்கு தானே ஆத்மாலயம் அமைத்தலாகும்.

இதனால் அவர்கள் வாழும்போதும் வாழ்ந்தபின்பும் இறவா புகழ் பெற்று புண்ணியம் அடைவார்கள்.

**குருவம்சம் யாரிடமும் எக்காரணத்திற்காவும் நன்கொடைகள் விரும்புவது கிடையாது.**

**காணும் இயற்கையெல்லாம் இறைவனின் பிம்பங்களே.**

**இயற்கை எய்தியவர்களே நம் தெய்வங்கள்.**

**நன்றி**

**வணக்கம்**

**வாழ்க குருவம்சம்**

**உங்கள் அன்பு சகோதரன்**
**குருவம்சம் கதிரேசன்**

**தொலைப்பேசி: 9962741309**

**guruvamsam.kadiresan@gmail.com**

**www.guruvamsam.com**

---